பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## VALAMPURI

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 28 ஞாயிற்றுகிழமை (14-10-2001) தொலைபேசி 3378 ஒலி 307

### ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பாடம் புகட்ட

# ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ்

# ஐ. தே. கட்சியுடன் கூட்டுச்சேரும்!

## ரவூப்ஹக்கீம் வலம்புரிக்கு பேட்டி

(நமது நிருபர்)

எதிர்வரும் டிசம்பர்மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள 12வது பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மரச்சின்னத்திலும், ஏனைய மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்திலும் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது தேசியப்பட்டியல் மூலமான எம். பியாக இதுவரை ஒரு சிங்களவரையே நியமித்து வந்தது. ஆனால் இத்தேர்தலில் சிறுபான்மை மக்களின் சுயாட்சிக்கோட் பாட்டை வலியுறுத்திக் கூறககூடிய ஒரு தமிழரை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்ரவூப்ஹக்கீம் நேற்று நள்ளிரவு தொலைபேசி மூலம் வலம்புரிக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியின் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் ஹக்கீம் மேலும் தெரிவித்திருப்பதாவது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கியமுன்னணி அரசைத் தோற்கடிக்கக் கூடிய சகலவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம்.

சந்திரிகா அரசாங்கம்இந்த நாட்டு சிறுபான்மை மக்களுக்குசெய்ததுரோகங்களுக்கு நல்ல படிப்பினையைப் புகட்டவே நாம் ஐக்கியதேசியக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்துள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் நாம் கூட்டுச் சேர்ந்துள்ள போதிலும் சில தேர்தல் மாவட்டங்களில்தனித்து மரச்சின்னத்திலும், வேறுசில மாவட்டங்களில் ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து யானைச் சின்னத்திலும் போட்டியிடவுள்ளோம்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## விக்கிரமபாகுகருணாரட்னா சி.ஐ.டி பொலிசாரால் தீவிர விசாரணை

(கொழும்பு)

புதிய இடதுசாரி முன்னணியின் தலைவரும், மேல்மாகாண சபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்னாவை நேற்றுமுன்தினம் இரகசியப் பொலிசார் தீவிர விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

கொழும்பு கொம்பனித் தெருவில் அமைந்துள்ள புதிய இடதுசாரி முன்னணிக்கட்சி அலுவலகத்துக்குச் சென்ற இரகசியப் பொலிசார், விக்கிரமபாகு கருணாரட்னாவை சுமார் நான்கு மணிநேரம் தடுத்துவைத்து துருவித்துருவி விசாரித்தனர்.

'இனவாதப் போரில்ஈடுபட்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கா தாக்குதல் ஜேணி மினிபஸ் மீட்பு உரிமையாளர் கைது!

(கொழும்பு)

கட்டு நாயக்கா விமானத்தளம் மீது தாக்குதல் நடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட ஜேணிரக றோசா மினி பஸ் கைப்பற்றப்பட்டதுடன் அதன் உரிமையாளரும்நேற்று முன்தினம் கல்கிசைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு பாமன் கடையில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞரொருவர் வழங்கிய தகவலையடுத்தே, மேற்படி பஸ் உரிமையாளர் கைது செய்யப்பட்டார்.

இந்த பஸ் கொழும்புக்கும் நீர் கொழும்புக்கும்இடையில் கடந்த பத்து மாதங்கள் சேவையில் ஈடுபட்டுள்ளது. அத்துடன் கொழும்புக்கும் திருகோணமலைக்கும் இடையிலும் இந்த பஸ் சேவையில் ஈடுபட்டுள்ளது.

இந்த பஸ்சின் உரிமையாளர் திருகோணமலையைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகிறது.

இதேவேளைகட்டுநாயக்கா தாக்குதலுக்கு பயன்படுத்தப் பஸ்சை பொலிஸார் தேடிவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## ஸ்ரீ. மு. காங்கிரஸ் உறுப்பினர் பேரியலுடன் இணைவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர்களில் ஒருவரான முஸ்தபா கட்சியில் இருந்து வெளியேறி திருமதி பேரியல் அஷ்ரப்பின் தலைமையில் தேசிய ஐக்கியமுன்னணியில் இணையவுள்ளதாக நம்பகமாக தெரியவந்துள்ளது.

கிழக்கிலங்கை அரசியலில் மிகமுக்கியஸ்தராகக் கருதப்படும் முஸ்தபா காங்கிரஸ் கட்சியைவிட்டு விலகி பேரியல்

## ஹெலி நோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கரையோரப் பிரதேசங்களையும், தீவுப்பகுதிகளையும் உள்ளடக்கிய பகுதிகளை ஹெலிகொப்டர் ஒன்று நேற்றிரவு நோட்டமிட்டது.

நேற்றிரவு 9 மணிமுதல் 9-30மணி வரை தாளப்பறந்தவாறு நோட்டம் இட்டபோதும் மேலதிக தகவல்கள் தெரியவரவில்லை. (ம

# ரவூப்ஹக்கீம் வலம்புரிக்கு பேட்டி

(நமது நிருபர்)

**எதிர்வரும் டிசம்பர்மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள 12வது பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மரச்சின்னத்திலும், ஏனைய மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்திலும் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.**

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது தேசியப்பட்டியல் மூலமான எம். பியாக இதுவரை ஒரு சிங்களவரையே நியமித்து வந்தது. ஆனால் இத்தேர்தலில் சிறுபான்மை மக்களின் சுயாட்சிக்கோட்பாட்டை வலியுறுத்திக் கூறக்கூடிய ஒரு தமிழரை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்ரவூப்ஹக்கீம் நேற்று நள்ளிரவு தொலைபேசி மூலம் வலம்புரிக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியின் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் ஹக்கீம் மேலும் தெரிவித்திருப்பதாவது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கியமுன்னணி அரசைத் தோற்கடிக்கக் கூடிய சகலவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம்.

சந்திரிகா அரசாங்கம்இந்த நாட்டு சிறுபான்மை மக்களுக்குசெய்ததுரோகங்களுக்கு நல்ல படிப்பினையைப் புகட்டவே நாம் ஐக்கியதேசியக் கட்சியுடன் கூடடுச்சேர்ந்துள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் நாம் கூட்டுச் சேர்ந்துள்ள போதிலும் சில தேர்தல் மாவட்டங்களில்தனித்து மரச்சின்னத்திலும், வேறுசில மாவட்டங்களில் ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து யானைச் சின்னத்திலும் போட்டியிடவுள்ளோம்,

(08ஆம் பக்கம் பார்க்க)

## விக்கிரமபாகுகருணாரட்னா சி.ஐ.டி பொலிசாரால் தீவிர விசாரணை

(கொழும்பு)

புதிய இடதுசாரி முன்னணியின் தலைவரும், மேல்மாகாண சபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்னாவை நேற்றுமுன்தினம் இரகசியப் பொலிசார் தீவிர விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

கொழும்பு கொம்பனித் தெருவில் அமைந்துள்ள புதிய இடது சாரி முன்னணிக்கட்சி அலுவலகத்துக்குச் சென்ற இரகசியப் பொலிசார், விக்கிரமபாகு கருணாரட்னாவை சுமார் நான்கு மணிநேரம் தடுத்துவைத்து துருவித்துருவி விசாரித்தனர்.

'இனவாதப் போரில்ஈடுபட்

(08ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்மக்களின் பொது நலனுக்காக தமிழ்க்கட்சிகளுடன் கூட்டுசேரதயார்!

## புளொட் சித்தார்த்தன் அறிவிப்பு

(வவுனியா)

தமிழ் பேசும் மக்களின் பொதுவான நலன்களில் ஒன்றுபட்டு செயற்பட தமிழ்க் கட்சிகள் முன்வருமாயின், எதிர்வரும் பொதுத் தேர்தலில் அக்கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடத் தாம் தயாராக இருப்பதாகத் தமிழீழமக்கள் விடுதலைக் கழகத் தலைவரும், முன்னாள்வன்னி மாவட்ட எம். பியுமான தர்மலிங்கம் சித்தார்த்தன் நேற்று வெளிநாட்டுச் செய்தி ஊடக

(08ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் ப.நோ.கூ. சங்கத்தில்

# நிவாரணத்திற்கு வழங்கப்பட்ட 188 அரிசிமுடை கடைகளில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் நிவாரண விநியோகத்துக்காக வழங்கப்பட்ட 188 மூடை அரிசி, சங்கங்களில் இருந்து மாயமாக மறைந்து, தனியார் வியாபாரிகளினது வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் இருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது.

வலி தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் அன்ரன் ஜோன்சன் தலைமையில் சென்ற குழுவினர் மேற்படி அரிசி மூடைகளை மீட்டதுடன் சம்மந்தப்பட்ட ஐந்து பேரை பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

நிவாரண விநியோகத்திற்காக வழங்கப்பட்ட அரிசி சங்கங்களின் கிளை முகாமையாளர்களால் தில்லுமுல்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கா தாக்குதல் ஜேணி மினிபஸ் மீட்பு உரிமையாளர் கைது!

(கொழும்பு)

கட்டு நாயக்கா விமானத்தளம் மீது தாக்குதல் நடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட ஜேணிரக றோசா மினி பஸ் கைப்பற்றப்பட்டதுடன் அதன் உரிமையாளரும்நேற்று முன்தினம் கல்கிசைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு பாமன் கடையில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞரொருவர் வழங்கிய தகவலையடுத்தே, மேற்படி பஸ் உரிமையாளர் கைது செய்யப்பட்டார்.

இந்த பஸ் கொழும்புக்கும் நீர் கொழும்புக்கும்இடையில் கடந்த பத்து மாதங்கள் சேவையில் ஈடுபட்டுள்ளது. அத்துடன் கொழும்புக்கும் திருகோணமலைக்கும் இடையிலும் இந்த பஸ் சேவையில் ஈடுபட்டுள்ளது.

இந்த பஸ்சின் உரிமையாளர் திருகோணமலையைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகிறது.

இதேவேளைகட்டுநாயக்கா தாக்குதலுக்கு பயன்படுத்தப் பஸ்சை பொலிஸார் தேடிவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## ஸ்ரீ. மு. காங்கிரஸ் உறுப்பினர் பேரியலுடன் இணைவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர்களில் ஒருவரான முஸ்தபா கட்சியில் இருந்து வெளியேறி திருமதி பேரியல் அஷ்ரப்பின் தலைமையில் தேசிய ஐக்கியமுன்னணியில் இணையவுள்ளதாக நம்பகமாக தெரியவந்துள்ளது.

கிழக்கிலங்கை அரசியலில் மிகமுக்கியஸ்தராகக் கருதப்படும் முஸ்தபா காங்கிரஸ் கட்சியைவிட்டு விலகி பேரியல் அஷரப்புடன் இணைவதால் தேசிய ஐக்கிய முன்னணியின் பலம் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியாவில் ஐந்துபேர் கைது

(வவுனியா)

வவுனியா செட்டிகுளத்தில் சக்திவாய்ந்த கிளைமோர் கண்ணிவெடியொன்றை மறைத்து வைத்திருந்த ஐந்து பேரைக் கைதுசெய்துள்ளதாக வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச். எம். டி. பெரேரா தெரிவித்துள்ளார்.

பத்துக்கிலோ எடையுள்ள இக்கிளைமோர்க்குண்டு செட்டிகுளம் பொலிஸ் நிலை

(8ஆம் பக்சம் பார்க்க)

## ஹெலி நோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கரையோரப் பிரதேசங்களையும், தீவுப்பகுதிகளையும் உள்ளடக்கிய பகுதிகளை ஹெலிகொப்டர் ஒன்று நேற்றிரவு நோட்டமிட்டது.

நேற்றிரவு 9 மணிமுதல் 9-30மணிவரை தாளப்பறந்தவாறு நோட்டம் இட்ட போதும் மேலதிக தகவல்கள் தெரியவரவில்லை. (ம

## மகஸின் கைதி உண்ணா விரதம்

(கொழும்பு)

புதிய மகஸின் சிறைச்சாலையில் உள்ள தமிழ்க் கைதி ஒருவர் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

அருளம்பலம் சந்திரமோகன் என்ற கைதியே கடந்த 3ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

இவரது உண்ணாவிரதம் தொடர்பாக மலையகமக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் ஜனாதிபதி சந்திரிகாவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (வ)

## புலிகளின் ஆதரவாளரான பிரி.எம்.பி. இலங்கைவருகை

(கொழும்பு)

பிரிட்டிஸ் பாராளுமன்ற உறுப்பினர் பஹறி ஹாடினர் அரசியல் விஜயமாக இலங்கை வந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அபிமானியும் ஆதரவாளருமான இவர், தொழிற் கட்சிப் பாராளுமன்ற உறுப்பி

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### தேவை

காரியாலயம் ஒன்றில் பணி புரிவதற்கு O/L வரை அல்லது அதற்கு மேற்பட படித்த யாழ். மாநகரசபை எல்லைக்குள் வதியும் பெண் பிள்ளை தேவை. சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல-226, மே/பா 'வலம்புரி, யாழ்ப்பாணம். (3860)

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை சேகரிப்பவர் எம்மிடம் கொண்டு வந்து தந்தால், நல்ல விலை தந்து பெற்றுக் கொள்வோம். மல்ரி - ஓயில், கே: கே; எஸ், வீதி, இணுவில்; (C-2373)

## தென்னைவட்டில் கிரனேற்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பகுதியில் நாகராசா என்பவரது வீட்டிலுள்ள தென்னை வட்டில் அண்மையில் கிரனேற் கண்டுபிடிக்ப்பட்டதையடுத்து இராணுவத்தினர் அதை அகற்றி வெடிக்கவைத்தனர்; (எ-236)

## ஆண்டு நிறைவு விழா

(ஈச்சமோட்டை)

மல்வம் திருக்குடும்ப ஆலய கத்தோலிக்க இளையோர் ஒன்றிய இரண்டாவது ஆண்டு நிறைவு விழா இன்று காலை 9.30மணிக்கு ஒன்றியத்தலைவர்செ.பிறீமன்தலைமையில் மல்வம்றோ. க. த. க பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக அருட் தந்தை போல் நட்சத்திரமும்கௌரவ விருந்தினராக யோசப்பாலாவும் கலந்து கொள்ளவுள்ளனர்; (உ-59)

## ஐ.தே.க.வின் துரோகத்தனத்தினால்
# புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நற் பயன்கள் இழக்கப்பட்டுவிட்டன
## ஜே.வி.பி.கரும் சீற்றம் கொண்டு அறிக்கை

(கொழும்பு)

ஐ: தே. க; வும் கட்சிமாறிகளும் துரோகமிழைத்து விட்டனர்என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

அதிகார வெறி பிடித்த ஐ; தே. க: வினதும் பண ஆசை பிடித்த துரோகத்தனமான அதிருப்தியாளர்களினதும் சதிகளினால் ஆளும் அரசிற்கும் மக்கள் விடுதலைக் முன்னணிக்கும்இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நற்பயன்கள் இழக்கப்பட்டு விட்டன என்றும் மக்கள் விடுதலை முன்னணி விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அராஜகத்திற்குள் தள்ளப் பட்டுக் கொண்டிருந்த நாட்டை காப்பாற்றும் நோக்கில்தாம்ஆட்சியைகாப்பாற்ற முன் வந்து ஒரு ஆண்டு கால தகுதிகாண் ஆட்சி நடத்தும் நிர்ப்பந்தத்திற்த அரசாங்கத்தை கொண்டு வந்ததாகவும், ஜனநாயகத் தேர்தல்களை நடத்துவதற்கேற்ற அத்தி வாரத்தை இட்டதாகவும் ஐ. தே.க; வினாலும் பணத்தாசை பிடித்த கட்சி மாறினாலும் அவற்றிலிருந்து கிடைக்கவிருந்த நற்பயன்கள் இழக்கப்பட்டு விட்டதாகவும் அதில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சிமாறிகள் ஏற்கனவே கெட்ட பெயர் பெற்ற ஐ. தே; க; வுடன் இணைந்து அமைக்கும் அரசும் ஊழல் அரசாகவே இருக்கும் இவர்களின் பிரசாரத்தினால் மக்கள் ஏமாறக்கூடாது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருந்தது. (உ)

## மாதாந்தக் கூட்டம்

(அளவெட்டி)

யா/ உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் 18 ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப; 4. 30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் செல்வி பி. வடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.(உ-201)

## சிரமதானம்

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயச் சுற்றாடலை ஆலய இந்து இளைஞர் மன்ற இளைஞர் சிரமதானம் மூலம் துப்பரவு செய்வதில் ஈடுபட்டுவருகின்றனர்;

எதிர்வரும் புதன்கிழமை நவராத்திரி விரதாரம்பத்தை முன்னிட்டே சிரமதானத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (உ-223)

## 15வது நினைவு தினம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட முதலாவது தளபதிலெப்ரினன்ட் கேணல் விக்டரின் 15 வது நினைவு தினம் கடந்த வெள்ளியன்று அனுஷ்டிக்கப் பட்டது; [உ-4]

## அறிவித்தல்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

**பௌதிக விஞ்ஞான கற்கைநெறி 2001/2002 (வெற்றிடம் நிரப்பும் பட்டியல் - 01)**

பௌதீக விஞ்ஞான கற்கைநெறிக்கு வெற்றிடம் நிரப்பும் பட்டியல் -01 இல் மேலதிகமாக 24 பேர் தெரிவாகியுள்ளனர்; இவ் விபரங்களை யாழ்; பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி காரியாலய விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்;

ஏற்கனவே அறிமுக நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி உள்ளபடியால் தெரிவான மாணவர்கள் தங்கள் பதிவினை 22-10-2001 க்கு முன்னர் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

விஞ்ஞான பீட விரிவுரைகள் 15 - 10 - 2001 அன்று ஆரம்பமாகவுள்ளன.

பதிவாளர்
யாழ்; பல்கலைக்கழகம்
(கி-2737)

## கண்ணீர் அஞ்சலி

தீவுப்பகுதி தெற்கு பிரதேசசபைத் தலைவரும் எமது சமாசப் போசகருமாகிய
உயர்திரு. ந.கருணாகரகுருமூர்த்தி J. P. U. M)
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
**நமசிவாயம் மனோன்மணி**

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

தீவுப்பகுதி தெற்கு,
சனசமூக நிலையங்களின் சமாசம்.
வங்களாவடி,
வேலணை. (கி/ 2735)

## கண்ணீர் அஞ்சலி

வேலணை பிரதேச சபைத் தலைவர்
திரு. ந. கருணாகரகுருமூர்த்தி
(ஜே. பி. யு. எம்.)
அவர்களின் அன்புத்தாயார்

திருமதி
**நமசிவயம் மனோன்மணி**

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

ஓம் சாந்தி

தலைவர், உபதலைவர்,
அமைப்பாளர், உறுப்பினர்கள்
பணியாளர்கள்.

வடமராட்சி, தெற்கு மேற்கு
பிரதேசசபை,
கரவெட்டி. (C/2734)

## கண்ணீர் அஞ்சலி

தீவுப்பகுதி தெற்குப் பிரதேச சபைத் தலைவர்
திரு. ந. கருணாகரகுருமூர்த்தி (J. P. U. M)
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
**நமசிவாயம் மனோன்மணி**

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்;

அலுவலகப் பொறுப்பதிகாரியும் ஊழியர்களும்
உப அலுவலகம்
புங்குடுதீவு
(C-2731)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

# கேள்வி அறிவித்தல்

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி 15:10.2001 ... 17.10.2001 பி; ப; 2.00 மணிவரை.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 18;10;2001 பி; ப; 2.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறந்து பார்க்கப்படும் திகதி 18.10.2001 பி. ப. 2.00 மணி

ஒவ்வொரு வேலைக்கும் அதற்கெதிரே காட்டப்படும் மீளளிக்கப்படும், மீளளிக்கப்படாத கட்டணங்களைச் செலுத்துபவர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

| | வேலையின் விபரம் | மீளளிக்கப்படும் கேள்விப்பத்திர வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர வைப்புப்பணம் ஜி. எஸ். ரி. அறவிடப்படும் |
|---|---|---|---|
| 1; | வெள்ளவாய்க்கால் ஒழுங்கை திருத்தம் (கே: கே. எஸ். வீதிக்கு கிழக்குப்பக்கம்) | 4000:00 | 250:00 |
| 2; | புகையிரத நிலைய கிழக்கு வீதி கட்டம் 11 | 6000 00 | 250.00 |
| 3; | சுன்னாகம் சந்தை பராமரிப்பு (மத்திய சந்தை) | 3750.00 | 250.00 |
| 4; | உடுவில் கீளிச்சந்தை வீதி கற்களிட்டு தாரிடல் | 2000·00 | 150:00 |
| 5, | தேவாறணை வீதி புனரமைப்பு | 3500.00 | 250:00 |
| 6. | சேமக்காலை வீதி புனரமைப்பு | 850.00 | 150:00 |
| 7; | புதிய கிணறு அமைத்தல் | 1500;00 | 150:00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களின் மூலப் பிரதியை தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் என்ற முகவரிக்கும், அதன்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத்தபாலிலோ அல்லது நோடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடல் வேண்டும், மேலதிக விபரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் சபையின் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்;

குறிப்பு: ஆர்: எம்: சி: திணைக்களங்களில் பதிவு செய்தவர்களுக்குமட்டுமே ஒப்பந்தப்பத்திரங்கள் வழங்கப்படும்;

க. கமலசேகரன் ஜே. பி. யு. எம்.
தலைவர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்; (சி 2736)

# இராணுவத்தில் இருந்து இதுவரை

# 29 ஆயிரம் பேர் தப்பியோட்டம்

[கொழும்பு]

இதுவரை காலமும் இராணுவ சேவையில் இருந்து 29 ஆயிரத்திற்கும் அதிகமான இராணுவ வீரர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

உடதும்பர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கமல் ரணவீர தேசிய ஒருமைப்பாட்டு இன விவகார நல்லிணக்க அமைச்சின் அனுசரணையுடன் உடதும்பர பொலிஸ் நிலையத்தில் நடத்தப்பட்ட சமாதானக் குழுக்களின் பிரதிநிதிகளுக்கான கூட்டத்தில்பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் பரவலாக இடம் பெற்றுவரும்கொலை, கொள்ளைகள், பாலியல் வல்லுறவு போன்றபலதரப்பட்ட குற்றச் செல்களிலும் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களே ஈடுபடுவதாக தமக்கு தகவல் கிடைத்து வருவதாகவும்,

இவர்கள் குறித்துபாதுகாப்பு பிரிவினர்க்குத் தகவல்வழங்க பொதுமக்கள் பின்நிற்கக் கூடாதெனவும் அவர் கேட்டுக் கொண்டார். [உ]

## ஓராண்டு நினைவு தினம்

(அத்தியடி]

மறைந்த பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் ஓராண்டு நினைவு தின நிகழ்வுகள் எதிர்வரும் புதன் கிழமை பி.ப. 2.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதிகலையரங்கில்நடைபெறவுள்ளன. [உ-230

---

அன்பு மாணவர்களே!

**எதிர்வரும் 17-10-2001 அன்று**

**நவராத்திரி பூசை**

ஆரம்பமாவதையொட்டி

**'கவிதை மாலை'**

பகுதியை வலம்புரி வெளியிடவுள்ளது. மாணவர்களாகிய உங்களின் கவிதையும் இடம்பெற வேண்டுமாயின் நான்கு வரிகளுக்கு மேற்படாத கவிதைகளை ஆக்கி பாடசாலை, கற்கும் தரம் மாணவர் பெயர் ஆகிய விபரங்களுடன்

**"வலம்புரி"**

இல. 15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

குறிப்பு; கவிதைகள் மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருப்பது அவசியம்.

(ஆ-ர்)

---

சந்திரிக்காவுக்கு அடிக்குமேல் அடி

## லக்ஷ்மன் கிரியல்லவும் கட்சிவிட்டுகட்சிதாவினார்

(கொழும்பு)

விளையாட்டு மற்றும் சுற்றுலாத்துறை முன்னாள்அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்லஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

நேற்று தனது இராஜினாமாக் கடிதத்தினை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா விடம்அனுப்பிவைத்த பின்னர், தனதுநிலை தொடர்பாக விளக்கமளிக்கையில்,

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தமது கட்சி சார்பாக போட்டியிட்டோ தேசியப் பட்டியல் மூலமோ நாடாளுமன்றிற்குத் தெரிவாகலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க தன்னிடம் தெரிவித்ததாகவும்,

ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக கண்டி மாவட்டத்தில் தான் போட்டியிடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். [உ-7]

## சாரணர் பாசறை விழா இன்று இறுதி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் சாரணர் கிளைச்சங்க ஆதரவில் இடம் பெறும் வருடாந்த சாரணர் பாசறை விழா நேற்று முன்தினம் முதல் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறறு வருகின்றது.

இன்றைய நிகழ்வில் நிலைக் காட்சியும், பாச்றைப் பரிசோதனையும், இதனையொட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கலும் இடம்பெறுதலுடன் பாசறை விழா முடிவுறும்.

இதேவேளை, மேற்படி நிகழ்வு 15 வருட இடைவெளியின் பின் இங்கு இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. (உ-2)

## பசுமாடு மீட்பு

காணாமற் போன பசுமாடு மலக்குழி ஒன்றில்இருந்து 22 நாட்களின் பின்னர்மீட்கப்பட்டுள்ளது.

அராலி மத்தியைச் சேர்ந்த ஒருவருடைய பசுமாடேஇவ்வாறு உணவு தண்ணீர் அற்ற நிலையில் 22 நாட்களின் பின்னர் மீட்கப்பட்டது. [உ-21]

---

## சுக வாழ்வு

பரிபூரணமாகத் தொற்று நீக்கப்படாத ஊசிகள் போன்றவை நோய்பரவலை உண்டாக்குகின்றன.

(எயிட்ஸ் வருமுன் காப்போம்)

-தரிசனம்.

---

## இராசி பலன்

14/10/2001
புரட்டாதி 28 ஞாயிறு
துவாதசி மு.ப 8.30 வரை
பூரம் மு இ 6 43 வரை
இராகுகாலம் 4 32-6.04
நல்லநேரம் 9 02-10.32
சித்தாமிர்தம், பிரதோச விரதம்

**மேடம்**

தாழ்வு நிலை, வியாபார நன்மை, காரிய இடையூறு, பெரியவர் சந்திப்பு.

**இடபம்**

மனச் சஞ்சலம், அற்பரி உறவு முயற்சி தாமதம், நிலைக்கேடு.

**மிதுனம்**

இனிய சம்பவம், பிரயாண சுகம், காரிய அனுகூலம், தன வரவு.

**கடகம்**

தனவிரயம், கௌரவக் குறைவு வீண்வார்த்தை, முயற்சி தாமதம்.

**சிங்கம்**

நண்பர்கள் உதவி, ஜனவசியம், புதிய பொருள் சேர்க்கை, சயனசுகம்.

**கன்னி**

பிதாசிந்தை, பிரயாண அலைச்சல், உணர்ச்சி வசப்படல், காரியதாமதம்.

**துலாம்**

தெய்வதரிசனம், வரவேற்பு தொழில இலாபம், முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**

போசன சுகம், நன்மை விருத்தி அதிக பிரயாசை, பிறர் உதவி.

**தனுசு**

உடல் உழைப்பு, பதட்டம், முயற்சி, கைகூடும், வயிற்றுக் கோளாறு.

**மகரம்**

உறவினர் வெறுப்பு, போசன சுகம், பிரயாண பயம், தர்மம்.

**கும்பம்**

சுவாரஸ்யம், வாகன வசதி, அபூர்வ சந்திப்பு, வரவேற்பு.

**மீனம்**

தொழில் விருத்தி, ஆரோக்கியம், திடீர் நன்மை, காரிய அனுகூலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

---

## ஸ்ரீ வாணியின் ஏழு கேள்விகள்

## போட்டி இல :-03

1. உலகில் மிகவும் உயரமான இடத்திலுள்ள எரிமலை எது?
2. G. M. T. என்பது என்ன?
3. உலகில் பெண்களுக்கு கட்டாய இராணுவ பயிற்சியளிக்கும் நாடு எது?
4. கிரீன்லாந்து தீவு எந்த நாட்டிற்கு சொந்தமானது?
5. கோல்ப் விளையாட்டின் தாயகம் எது?
6. சர்வதேச அணுசக்தி நிலையம் எங்குள்ளது?
7. செய்திகளை தந்திமூலம் அனுப்பும் ஸ்தாபனத்தின் ஸ்தாபகர் யார்?

மேலே உள்ள கேள்விகளுக்கான சரியான விடையை எழுதி கீழே உள்ள கூப்பனை நிரப்பி அனுப்பி வைக்கவும்.

**ஸ்ரீ வாணியின் ஏழு கேள்விகள்**
**போட்டி இல. 03**

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

தொழில் : ..............................

கையொப்பம் : ..............................

விடைகளை அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் திகதி: 21.10.2001

அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்ரீ வாணியின் ஏழு கேள்விகள், ஸ்ரீ வாணி நகை மாடம், 173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டி இல. 02 ற்கான விடைகள்

1. யூலை 28
2. 1961
3. மொஸ்கோ
4. 1815
5. தென்சீனக்கடல்
6. ஜீன ஹென்றிடுனான்ற்
7. 1948

போட்டி இல- 02 சரியான விடைகளை எழுதய அதிர்ஷ்டசாலிகள் மூவரின் பெயர் விபரம்

1 ம் பரிசு : திருமதி ஏ. ஷர்மிலா
இல:883 நாவலர் வீதி,
அரியாலை.

2 ம் பரிசு : கு: டிலக்ஷிகா
இல: 425, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம.

3 ம் பரிசு : கே. இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலிகள் தங்கள் பெயர் விபரங்களை உறுதிப்படுத்தி ஸ்ரீ வாணி நகை மாடத்தில் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**பரிசில்கள் விபரம்**

1 ம் பரிசு: ரூபா 200.00
2 ம் பரிசு: ரூபா 150.00
3 ம் பரிசு: ரூபா 100.00

போட்டியில் பங்கு பற்றிய அனைவருக்கும் தமது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றனர். தங்க நகை உலகில் மங்காப் புகழ் பெற்ற ஸ்ரீ வாணி நகை மாடத்தினர்.

(சி-2732)

## திருட்டு

(யாழ்ப்பாணம்)

சங்கானை பொன்னாலை வீதியில் அமைந்துள்ள புடைவை வியாபாரநிலையம் ஒன்று உடைக்கப்பட்டு சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள்சூறையாடப்பட்டுள்ளன கடந்த வியாழன் இரவு இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. [செ-104]

* * *

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள பொருளிற் கல்லூரியில் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் திருட்டு இடம் பெற்றுள்ளது. இரு தினங்களும் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் ஒரு தொகைப் பணம்உட்பட காரியாலயப் பொருட்கள் பலவற்றையும் திருடிச் சென்றுள்ளனர். (செ-104)

## விளையாட்டு போட்டி

(மந்திகை)

வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் இயங்கும் சரஸ்வதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பி. ப, 1.30 மணிக்கு கிராமசேவையாளர் சி. சிவபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குபளைபிரதேச செயலர் சி புத்திசிகாமணி, சாவகச்சேரி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை, பருத்தித்துறை பிரதேச செயலர்ஆ. சிவசுவாமி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

(செ-23)

## கிபிர் தாக்குதல்

(வவுனியா)

யாழ். குடா கடல் நீரேரியிலும் அதனை அண்டிய விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளான பூநகரி' கல்முனை ஆகிய பகுதிகளிலும் நேற்று மாலை கிபிர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தியதாகவும்,

இதன் போது புலிகளின் படகு ஒன்று சேதமாக்கப்பட்டதாகவும் விசேட ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ந-5)

## சோதிட பலன்

# சுபமுகூர்த்தங்களில் தொடங்கும் செயல்கள் திருப்தியையும், நன்மைகளையும் ஏற்படுத்தும்

எந்தவொரு நல்லகாரியத்தைச் செய்யும் போதும் நாள், கோள் நிலைகளை அறிந்து சுபமுகூர்த்தங்களில் ஆரம்பிப்பது நீண்டகாலமாகவே நம்மவர் மத்தியில் காணப்படுவ தொன்றாகும். சோதிட நிபுணர்கள் இவற்றைக் கணிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றார்கள்.

### விலக்கப்பட்ட காலங்கள்

சுப முகூர்த்தங்களுக்கு, இரண்டு அமாவாசைகள் நிகழும் மாதங்கள், இரண்டு ரேவதி நட்சத்திரங்கள் வரும் மாதங்கள், வியாழனும, வெள்ளியும் பகலில் காணப்படும் மாதங்கள். வியாழனும் வெள்ளியும் அஸ்தமனமாயிருக்கும்காலங்கள், வியாழனும் வெள்ளியும் ஏழாம் பார்வையால் ஒருவரை ஒருவர் பார்க்கும் காலம் என்பன விலக்கப்பட வேண்டியனவாகும். எந்த நாளிலும், காலையில் சூரியோதயத்திற்குமூன்று மணித்தியாலங்களுக்கு முன்னிருந்து உதயம் வரைக்குமானநேரம், மாலையில் சூரிய அஸ்தமனத்திற்குப் பின் ஒன்றரை மணித்தியாலம் வரைக்கும், பிரதோஷ நட்சத்திரங்களில் சூரிய அஸ்தமனத்திற்கு முன் ஒன்றரை மணித்தியாலம் தொடங்கி இரவு முழுவதும், நள்ளிரவிற்கு ஒருநாழிகை முன்னும் பின்னும், பகல் நேரத்தை ஐந்தாகப் பிரித்து நாலாம் ஐந்தாம் பாகங்கள், சுப முகூர்த்தங்களுக்கு விலக்கப்பட வேண்டிய நேரங்களாகும்.

சித்திரையில் கும்பலக்கினமும், அச்சுவினி, ரோகினியும், வைகாசியில் மீனலக்கினமும், சித்திரை, உத்தரம், பூசம், சுவாதி, ஆனியில்இடபலக்கினமும், புனர் பூசமும்,

**தொகுப்பு : மதிவாணர்**

ஆடியில் மிதுன லக்கினமும் பூரட்டாதி, அவிட்டமும், ஆவணியில் மேடமும், பூராடம், உத்தரமும், புரட்டாதியில்கன்னியும, சதயம், ரேவதியும் ஐப்பசியில் விருச்சிகமும், உத்தரட்டாதியும் கார்த்திகையில்துலாலக்கினமும் மிருகசீரிடம், அனுஷம் கார்த்திகை, பூசமும், மார்சழியில் தனுசும், உத்தரம் விசாகமும், தையில் கடகமும், அச்சுவினி, அத்தம் திருவாதிரையும், மாசியில் மகரமும், திருவோணம் மூலமும் பங்குனியில் சிங்கமும், பரணி, கேட்டையும் சுபமுகூர்த்தங்களுக்கு விலக்க வேண்டிய இலக்கினங்களும், நட்சத்திரங்களுமாகும. அமாவாசை, பூரணை தினங்கள், சுக்கில பட்ச கிருஷ்ண பட்ச சதுர்த்தசி, அட்டமி, நவமி திதிகள் முகூர்த்தங்களுக்குத் தவிர்க்க வேண்டியவையாகும.

### திதியும் நட்சத்திரமும் சேர்தல்

தசமியும் ரோகினியும் ஒன்றாய் வந்தால, திரயோதசியும் உத்தரம்அல்லதுசித்திரை அல்லது சுவாதியும் ஒன்றாய் வந்தால், பிரதமையும் பூராடமும் ஒன்றாய் வந்தால் துவாதசியும் ஆயிலியமும் சேர்ந்தால், பஞ்சமியும் கார்த்திகை அல்லது மகமும் ஒன்றாகினால், அட்டமியும் பூரட்டாதி அல்லது ரோகிணியும் ஒன்றாய் வந்தால், திருதியையும் உத்தரமும் ஒன்றாய் வந்தால், துவிதியையும் உத்தராடம்அல்லது உத்தரட்டாதியும் சேர்ந்தால், ஸப்தமியும் அத்தம் அல்லது மூலமும் ஒன்றாய் வந்தாலும், பிரதமை தினம், கிருஷ்ண பட்ச ஏகாதசி, சூரியன் இராசி அந்தத்தில் அல்லது இரு இராசிகளிலும்நிற்கிற நாட்களும் ஒன்றுக்கும் உதவாத நாட்களாகக் கணிக்கப்படுகின்றன.

இராகு காலம் ஒவ்வொரு நாளும் $3\frac{3}{4}$ நாழிகைக்கு அதாவது $1\frac{1}{2}$ மணித்தியாலத்திற்கு கீழ்க் குறிப்பிட்டவாறு இருக்கும். இந்த நேரங்களில் சுபகருமங்கள்செய்யலாகாது. திங்கள் மு ப. 7.30 தொடக்கம் 9.00 மணி வரையும், சனி 9.00 மணிதொடக்கம் 10 30 வரையும் வெள்ளி 10.30 தொடக்கம் 12.00 மணி வரையும் புதன் பி. ப. 12.00 தொடக்கம் 1 30 வரையும் வியாழன் 1.30 தொடக்கம் 3.00வரையும்செவ்வாய்3 00 தொடக்கம் 4.30 வரையும் ஞாயிறு4.30தொடக்கம்6.00 மணிவரையும் இராகுகாலமாகும். இரவுக்கும் இப்படியே அமையும், இவற்றைவிடவேறு நுணுக்கமான விடயங்களையும சோதிட வல்லுநர்கள் சேர்த்துக் கொள்வார்கள், பஞ்சாங்கங்களில்இவ்வாறான கணிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பூர்வ பட்சத்தில் ஏகாதசியும் அதன் பின் பூரணை வரைக்கும் அபர பட்சத்தில் பிரதமை தொடக்கம் பஞ்சமி வரையும் முகூர்த்தங்களுக்கு மிக நல்ல நாட்களாகக் கருதப்படுகின்றன. அபரபட்சத்தில் பஞ்சமியின் பின்னர் தசமி வரையும் சமமானதாகச் சொல்லப்படுகின்றது.

சுப முகூர்த்தங்களைப் பார்த்து வேலைகளை ஆரம்பிப்பதால் நன்மைகளும், திருப்தியும் ஏற்படவழியுண்டு.

## ஜனாதிபதியின் அறிவிப்புக்கு ஜே. வி. பி. பாராட்டு

(கொழும்பு)

பொதுத்தேர்தல் நடத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்ததை ஜே. வி. பி. பாராட்டியுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தவிர்க்க நினைத்து பாராளு மன்றம் மீண்டும் 2 மாதங்களுக்கும் ஒத்திவைக்கப்பட்டிருந் தால் வீதிகளில்போராட்டம் ஆரம்பமாகியிருக்கும்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் காலாவதியாகியுள்ளது. இந்தப் புரிந்துணர்வுஒப்பந்தம் செயற்படுவதை பெரும் வர்த்தகர்கள் விரும்பவில்லை.

காரணம், இவர்கள் அரச வங்கிகளில் பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டி வரலாம் என்று அஞ்சினர், இவர்களின் தேவையை நிறைவேற்றவே ஐ. தே. க. அவசரமாக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்ததென்று ம. வி. மு. மேலும் தெரிவித்துள்ளது. (உ)

## சிந்தனை விளக்கம்

பொ. கைலாசபதியின் சிந்தனைகளைப் படித்து விளங்கிக் கொள்ள விரும்புபவர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க அளவெட்டி பொ. கைலாசபதி நூற்றாண்டு விழாக் குழு முன் வந்துள்ளது.

இந்த வகையில், விருப்பமுடையவர்களை தங்கள் பெயர் விலாசங்களையும், தமக்குவசதியாகவுள்ள தினத்தையும் மயிலங்கூடலூர் பி. நடராசா, 314, செம்மணி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கம்பஹாவில் அனுரா போட்டி

முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநயக்கா பொதுஜன ஐக்கிய முன்னணியின் பட்டியலில் கம்பஹா மாவட்ட தலைமை வேட்பாளராக போட்டியிடவுள்ளார். (ந)

## கட்டுப்பாடிழந்த லாண்ட் மாஸ்ரர் மிக்ஸர்கடைக்குள் புகுந்தது

(யாழ்ப்பாணம்)

பனை மட்டைகளை ஏற்றி வந்த 'லாண்ட் மாஸ்ரர்' ஒன்று மிக்ஸர் கடைக்குள் புகுந்ததில் அங்கிருந்த மிக்ஸர் நிலத்தில் கொட்டுண்டு பயனற்றதானது.

சண்டிலிப்பாய் சீரணிப் பகுதியில் நேற்று முன் தினம் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அளவுக்கதிகமான பனம் மட்டைகளை ஏற்றிவந்த லாண்ட்மாஸ்ரர் பின்னால் வந்தவாகனத்திற்குவழிவிட்ட வேளை கட்டுப்பாட்டினை இழந்து அருகில் உள்ள 'மிக்சர்' கடைக்குள்புகுந்து கடையை சேதப்படுத்தியுள்ளது. [உ-


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

வெளிவாரிப் பரீட்சைகள்

1. வணிகமாணி - பகுதி I/II 2000
2. வணிகமாணி - பகுதி II 2000

மேற்படி பரீட்சைகள் இவ் வருடம் டிசம்பர் மாத முற்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் நடைபெறவுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 15/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர் யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 15/- க்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையை சுய முகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட நீள்தபால் உறையுடன் உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பதிவுகள்பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2001-11-09 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

12-10-2001 பதிவாளர்

[C/2727]



விற்பனைக்கு உண்டு

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திற்குச் சொந்தமான 49-8735 இலக்கத்தை உடைய Massey Ferguson-240 றைக்டர் (Tractor) ஒன்று Trailer, Tiller, Plough பொருட்களுடன் விற்பனைக்கு உள்ளது. இதனைக் காரியாலய நேரத்தில் (9.00-4.30) பார்வையிடலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
106, 4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

[C-2728]



இதய அஞ்சலி

தீவுப்பகுதி தெற்குப் பிரதேச சபைத் தலைவர்
திரு. ந. கருணாகரகுருமூர்த்தி (J.P.U.M)
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி நமசிவாயம் மனோன்மணி

அவர்கள் 11. 10. 2001 அன்று இறைவனடி எய்தியதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடையஇறைவனைப்பிரார்த்திக்கிறோம்.

உறுப்பினர்கள், அலுவலர்கள்
வேலணைப் பிரதேசசபை
உப அலுவலகம்
நயினாதீவு

(இ-2730)

## இன்று ஒரு தகவல்

# சோதிடரின் தந்திரம்

அரண் மனைக்குச் சோதிடன் ஒருவன் வந்தான். 'அரசே! ஒருவரைப்பார்த்த உடனே அவர் உயர் குடியிற் பிறந்தவரா இல்லையா என்று என்னால் சொல்ல முடியும்' என்று பெருமை பேசினான். அவன் உண்மையிலேயே நீ திறமையானவனாக இருந்தால் இங்கே பரிசுகள் பெறலாம் உன் சோதிடம் பொய்யானால் உன் உடலில் உயிர் இருக்காது. என்ன சொல்கிறாய். என்று கேட்டான் அரசன். 'எந்தச் சோதனை வேண்டுமானாலும் வையுங்கள் அரசே!' என்றான் அவன் மறு நாள் மாலை அரண்மனை அந்தப்புரத்தை அடைந்தான் சோதிடன். அங்கே அரசன் அமர்ந்திருந்தான். அவன் எதிரில் ஒரே மாதிரி உடையணிந்த ஐந்து பெண்கள் இருந்தனர். அனைவருமே பேரழகிகளாக விளங்கினார்கள்.

'இந்த ஐவரில் ஒருத்தி அரசி மற்றவர்கள நம் அரண்மனை நாட்டியக் காரிகள். இவர்களில் யார் அரசி என்பதைக் கண்டுபிடித்துச் சொல்பார்ப்போம்' என்று கேட்டான் அரசன். இப்படிப் பட்ட சோதனையை எதிர் பார்க்காத சோதிடன் சிந்தனையில் ஆழ்ந்தான். அவன் அறிவிற்கு நல்ல வழி ஒன்று தோன்றியது 'அரசே! மிக எளிய சோதனை இது. உயர் குடியில் பிறந்த அரசியாரின் தலைக்குமேல் மட்டும் பொன்னிற மேகம் சூழ்ந்துள்ளது மற்றவர் தலைக்குமேல் இல்லை' என்றான் அவன். நாட்டியக் காரிகள் நால்வரும் தங்கள் தலையை திருப்பி அரசியைப்பார்த்தார்கள். உண்மையான அரசி யாரென்பதை அறிந்த அவன் 'அரசே இவர்தான் நம் மதிப்புக்கு உரிய அரசியார்' என்று அரசியைக் காட்டினான். சோதிடனின் சூழ்ச்சியை உணராத அரசன் அவனுக்குப் பெரும் பரிசு கொடுத்து அனுப்பி வைத்தான்.

பேராசிரியர் எ. சோதி

# சம்பள உயர்வு கோரி, வேலை நிறுத்தத்தில் குதிக்க முஸ்தீபு

(கொழும்பு)

சம்பள உயர்வுக் கோரிக்கைக்கு போராடுவதற்கென அரச ஊழியர்கள் கூட்டாக அமைத்துள்ள குழு, தமது கோரிக்கை நிறைவேறாவிட்டால் நவம்பர் முதலாம் திகதியிலிருந்து கோரிக்கைகள் வெல்லப்படும் வரை வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

இக் கூட்டுச்குழுவின் சார்பில் பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய குயின்ரஸ் லியனகே இலங்கை மின்சார சபை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ரயில்வே திணைக்களம் ஆகியவற்றின் தொழிற் சங்கங்கள் உட்பட மொத்தம் 192 தொழிற்சங்கங்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்தார்.

அரசசேவையிலுள்ள 8 இலட்சம் ஊழியர்களில் 5 இலட்சம் ஊழியர்கள் இவ் வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்வர் என்றும் இது மிகப் பெரும் போராட்டமாக விருக்கும் என்றும் தெரிவித்தார். (உ)

## திருடர் தாக்கியதில் தம்பதியர் காயம்

(திருநெல்வேலி)

இரவு உணவுஉண்டுகொண்டிருந்த கணவன், மனைவி ஆகிய இருவரையும், உள்நுழைந்த திருடர்கள் கத்தி, பொல்லுகளால் கண்டபடி தாக்கிய வேளை தம்பதியர் எழுப்பிய அவலக் குரலை கேட்ட அயலவர்கள் திரண்டு வந்ததனையடுத்து திருடர்கள் தப்பியோடிவிட்டனர்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை அல்வாய் கிழக்கில் இடம் பெற்றுள்ளது.

காயமடைந்த சுப்பையா தர்மராசா (வயது-50) அவரது மனைவியான தர்மராசா செல்வமணி (வயது40) ஆகிய இருவரும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ-43)

## அனுமதியற்று அமைக்கப்படும் கட்டடங்கள் அகற்றப்படும்

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்குபிரதேச சபைஎல்லைக்குட் பட்ட இடங்களில் அனுமதியின்றிகட்டடங்கள் அமைத்தால் அதனை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதேசசபைத் தலைவர் வெ. அ. ஜோன்சன் அறிவித்துள்ளார்.

பிரதேச சபை எல்லைக்குள் கடைகளோ அல்லது வீடுகளோ அமைப்பதாயின், பிரதேச சபை வீதிப் பொதுவழிச் சட்டத்தின் பிரகாரம் சபையில் பொருத்தமான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து விண்ணப்பிப்பவர்களுக்கே கட்டடம் அமைக்க அனுமதி வழங்கப்படும் எனவும் கூறியுள்ளார். (உ-232)

## க. பொ. த.(சா|த)பரீட்சை டிசெம்பர் 11ல் ஆரம்பம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர (சா/த)பரீட்சை டிசெம்பர் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பரீட்சை டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி நடைபெறவிருந்த போதும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர் தலை முன்னிட்டே இப்பரீட்சை பிற்போடப் பட்டுள்ளதாகவும் பரீட்சைத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (செ)

## ஏழை மாணவர்க்கு உதவு பொருள்

(மந்திகை)

இம்பர்சிட்டி ஞானியார் கல்விக் கழகத்தின, வசதி குறைந்த மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10. 00 மணிக்கு நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழக் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

ஞானியார் கல்விக் கழகத் தலைவர் வே. நவரத்தினராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில வடமராட்சிக் கல்விவலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. சமலானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார் [உ-23]

## பனம்பழம் எடுத்துவந்தவர் படையினரிடம் சிக்கினார்

(சுண்டுக்குளி)

பனம்பழம் பொறுக்கியவர் படையினரிடம் அகப்பட்ட சம்பவம் நேற்று அதிகாலை வேளை கைதடி கிழக்கில் இடம் பெற்றுள்ளது.

கைதடி கிழக்கில் அமைந்துள்ள பனங்காணிஒன்றினுள் ஊரடங்கு அமுலில் இருந்த அதிகாலை வேளை பனம் பழங்களைப் பொறுக்கி மூட்டையாகக் கட்டி வந்த இளைஞனை சந்தேகங்கொண்ட படையினர் மடக்கிப் பிடித்து துருவித் துருவி விசாரித்ததாகவும், பின் அவ்விடம் சென்ற வேறொருவர் உண்மை நிலையக் கூறி இளைஞனை மீட்டதாகவும் தெரிய வந்துள்ளது. (உ-110)

## இருவழிப்பாதையை உறுதிப்படுத்தும் பணி இடைநிறுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வீதியின் இருவழித் தன்மையை உறுதி செய்யும் வகையில் வீதியின் நடுவே அமைக்கப்படவிருந்த தடுப்பு வேலை இடை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

மேற்படி வீதியின் நடுப்பகுதியில் வாகனங்கள் தரித்து நிற்றல், போக்குவரத்து விதிகளை அனுசரியாது வாகனங்களை வீதியினூடே ஊடறுத்துச் செலுத்துதல் ஆகியவற்றினால் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் முகமாகவே யாழ். மாநகரசபை மேற்படி பணியை ஆரம்பித்தது.

இருந்தபோதிலும், மேற்படி தடுப்பு நடவடிக்கையினால் வீதியின் இருமருங்கும் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களிற்கு வாகனங்களில் இருநது பொருட்களைஏற்றும் அல்லது இறக்கும்போது அதனூடாகச் செல்லும் வாகனங்களுக்கு போக்குவரத்துச் சிரமம ஏற்படலாம் என்பதனை சம்பந்தப்பட்ட வர்த்தக சங்கம் சுட்டிக் காட்டியதன் பேரில் இவ்வாறு இடை நிறுத்தப் பட்டிருப்பதாகவும்,

இது குறித்த முடிவு மாநகர சபைகூட்டத்தில் எடுக்கப்படவிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (உ-9,19)

## இறுதிஆட்டம் 15ம் திகதி

(சுண்டுக்குளி)

விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்டு வரும் 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான உதைப்பந்தாட்டப்போட்டித்தொடரில் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா பாடசாலை மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற அரையிறுதி ஆட்டங்களில் அருணோதயா கல்லூரி அணி அதனை எதிர்த்து ஆடிய ஸ்கந்தவரோதயா கல்லூரி அணியை 2:0 என்ற கோல்கணக்கில் வென்று இறுதி ஆட்டத்திற்கு தெரிவானது.

மற்றொரு ஆட்டத்தில் யூனியன் கல்லூரி அணி அதனை எதிர்த்து விளையாடிய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை 4:3 என்ற கோல் கணக்கில் வென்று இறுதி ஆட்டத்திற்குத் தெரிவாகி உள்ளது.

இப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டமும் 3 ஆம் இடத்திற்கான ஆட்டமும் எதிர்வரும் 15ஆம்திகதி பி.ப. 2.00மணிக்கு யா. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில்நடைபெறும் எனஅறிவிக்கப்பட்டுள்ளது. (உ-110)

## மீன்பிடித்தடையை நீக்க எச்சரிக்கையுடன் அவகாசம்

### ஜனாதிபதிக்கும் மகஜர்

(மந்திகை)

கடலில் மீன் பிடிப்பதற்கு சுமுக நிலையொன்றை ஏற்படுத்த புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்ட இரு வார காலக்கேடு கடந்த புதன்கிழமையுடன் முடிவடைந்த போதும், அடுத்த வெள்ளிக்கிழமை வரை மேலும் ஒருவார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காலக் கெடுவுக்குள தகுந்த முடிவு கிடைக்காது விட்டால், கடற்தொழிலாளர்கள் சங்கங்கள் போராட்டத்தில் இறங்க நேரிடும்.

வடமராட்சி கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடைகள் கட்டுப்பாடுகளை நீக்குமாறு கோரி ஜனாதிபதிக்கு மேற்படி சங்கங்கள் ஒன்றிணைந்து அனுப்பிய மகஜரிலேயே இவ்வாறு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடமராட்சிக் கடலில் மீன்பிடிப்பதற்கு அடிக்கடி விதிக்கப்படும் தடைகளினால்கடற்றொழிலாளர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்

இந்தத் துன்பங்களில் இருந்து மீள்வதற்காக, வடமராட்சிக் கடற்பகுதிகளில்மீன் பிடிப்பதற்குள்ள கட்டுப்பாடு மற்றும் கெடு பிடிகளை நீக்கி சுதந்திரமாக கடற்றொழிலைச் செய்ய நடவடிக்கை மேற் கொள்ள வேண்மென்று கடற்றொழிலாளர் சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்தன.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாகவாக் குறுதி வழங்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கென அமைச்சு வழங்கிய காலக்கெடு முடிவடைந்துள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-23-43)

## 15வயதிற்குட்பட்ட கிரிக்கெற் அணியில் தெரிவானோர் விபரம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டப் பாடசாலைகளில்இருந்து15வயதுக்குட்பட்டோர் கலந்துகொள்ளும் கிரிக்கெற் போட்டியாளர்அணிதெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வணியில் இடம்பெறுவோர்விபரம்வருமாறு: கனகலிங்கம்றொகான் [அணிதலைவர்]யா,ம க, தெய்வகுலரட்ணம்மதன்ராஜி செ.ஜோ. விஜயராஜா சத்தியபிரசன்னா க.ம.ம வி,சிங்ஸ்ரன் லெறிவ்லெயான் செ. ப. க. குணநாயகம் அருண்குமார் யா. இ. க. தியாகராஜாசுகந்தன் செ.ப.க, இரகசநேருறமணன்-காட்லி க. செல்வநாயகம் சிவசங்கர் கொ.இ.க அருணகிரிநாதன் ஜெனாதனா கொ.இ.க,சரவணபவன் கிருபவன் கொ.இ. கல்லூரி விக்னேஸ்வரன்லவசாந் கொ. இ.க. கந்தசாமி மகேந்திரன் காட்லிகல்லூரி கருணாகரன் ஜெனிதன்செ.ஜோ.கல்லூரி ஜீ:கபில்ஸ்ரன் செ.ப.க, விநாயகம் ஐங்கரன் யா.இ. க. ஜெயககுமார் மயூரன் யாழ். ம. க.

இவ்வணியினர்பிறமாவட்ட பாடசாலைகளுடன் கிறிக்கெற் சுற்றுப் போட்டியில் விளையாடுவதற்கு செல்லவுள்ளதாக யாழ் மத்தியகல்லூரி அதிபர் க.இராசதுரை தெரிவித்துள்ளார் [இ]

## விபத்து அபாயம்

(மந்திகை)

பருத்தித்துறை நகரிலிருந்து இறங்கு துறைக்கு செல்லும் பார ஊர்திகள் பருத்தித்துறை மீன் சந்தைப் பகுதியின் முன்பாக செல்வதனால் அப் பகுதியில் பெரும் நெருக்கடி நிலவுவதுடன் விபத்துக்கள் ஏற்படும் அபாயமும் நிலவுவதாக பாதசாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். [உ-23]

## சிந்தனைக்கு விருந்து

### குட்மோணிங் சேர்!

கற்பித்த ஆசாரைக் கண்டால் ஒளித்தோடல்
நற்பிள்ளைக் காப்பண்பென் றந்நாளில்-பற்பலரும்
போற்றினர் இன்றுள்ளோர் ஆசானைக் கண்டிட்டால்
சாற்றுவர் ''குட்மோணிங் சேர்''

- பழையவன்.

# பின்லேடனை ஒப்படைக்க ஆப்கானுக்கு மீண்டும் அவகாசம்

(வாஷிங்டன்)

ஒஸாமா பின்லேடனைக் கையளிக்க ஆப்கானுக்கு மேலும்கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர்புஷ் அறிவித்துள்ளார்.

பின்லேடனும் அவனது அமைப்பான அல்குவாட்டாவும் சரணடைந்தால் ஆப்கான் மீதான பேரழிவைத் தடுக்கலாம் என்ற மனிதாபிமான நோக்கிலேயே இவ்வாறு இரண்டாம் தடவையும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், ஒஸாமாபின்லேடன் விரைவில் சரணடையப் போவதில்லை என்றும் அவரைத் தாம் ஒப்படைக்கப் போவதில்லை என்றும், அப்படி லேடன் சரணடைந்தால் இஸ்லாமிய கொள்கைகளின்படி மாபெரும் குற்றமாகும் எனவும் தலிபான் அமைப்பின் தலைவர் முல்லாமுகமட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவின் தாக்குதல் தொடர்ந்து இடம்பெற்று வருவதோடு ஆப்கானின் முக்கிய தளங்கள் சில தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகவும் ஆப்கான் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-7)

# அமெரிக்காவில் குழந்தைகள் விற்பனைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(வாஷிங்டன்)

பின்லேடனுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் அமெரிக்காவில் ஒரு புறம் நடைபெற குழந்தைகளை விற்பதற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மறு முனையில் இடம் பெற்று வருவதாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதிகமாக குழந்தைகள் பெற்று அவர்களை சந்தையில் வயதுக்கேற்ற விலையில் விற்பனை செய்வது மனித உரிமை மீறல் என்று சர்வதேச மனித உரிமைகளிடம் முறையிட்டும் அதனைப் பொருட்படுத்தாத மனித உரிமைகள் நிறுவனங்கள், மற்றும் குழந்தைகளை விற்பனை செய்பவர்களுக்கு எதிராகவும் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் அங்கு இடம் பெற்று வருவதாக அமெரிக்க பத்திரிகை, மற்றும் வானொலி, தொலைக்காட்சி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (உ-07)

# ஆப்கான் மீதான தாக்குதலுக்கு பிரிட்டன் மக்கள் முழு ஆதரவு

(லண்டன்)

பிரிட்டனில் 80 வீதத்தினர் அமெரிக்க ஆப்கான்போருக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக பத்திரிகைக் கணிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

ஈ. வினிங்ஸ்ரான் டெட் என்ற ஆங்கிலப் பத்திரிகை போர் சம்பந்தமாக இலண்டனில் எடுத்த கருத்துக்கணிப்பின் படி, லண்டனில் வாழும் பெரும் பான்மை மக்கள் பிரிட்டனின் பிரதமர் ரொனி பிளேயரின் நடவடிக்கைக்கு ஆதரவு தருவதாகவும் அங்கு வாழும் சிறுபான்மையினர் பதற்றத்துடன் இருப்பதாகவும் தெரிவிக்கிறது.

உலக தரிசனம்

இதேவேளை, பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள லண்டன் மீதும் தொடரலாமென்றும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் லண்டன் எவ்விதமான பயங்கரவாதத் தாக்குதலையும் எதிர்கொள்ளக் காத்திருப்பதாக பிரித்தானியாவின் உள்துறைச் செயலாளர் டேவித் லங்கட் கூறியிருக்கிறார். (து)

# பாதுகாப்பு அமைச்சராக கே. சி. சி பந் நியமனம்

(புதுடில்லி)

மத்திய திட்டக் குழுத்தலைவர் கே. சி. பந் விரைவில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப் படலாமென்று செய்திகள் தெரிவிக்கின்றன. புதுடில்லி வட்டாரங்கள் இத் தகவலை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இணையத்தளம் வெளியிட்ட தகவலையடுத்து பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜோர்ச் பர்னாண்டஸ் பதவி விலகியமை தெரிந்தே. (து)

# ஹைதராபாத்தில் அமெரிக்கஎதிர்ப்பாளர்கள் கல்வீசியதில்70பேர்காயம்

(சென்னை)

அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக் காரர்கள் ஹைதராபாத்தில் வன்முறையில் ஈடுபட்டதால் இரு பொலிஸ் அதிகாரிகள் புகைப்படக்காரர்கள் உட்பட 70 பேர் காயமுற்றனர்.

நேற்று முன்தினம்ஹைதராபாத்திலுள்ள சார்மினா அருகே அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் பள்ளிவாசல் தொழுகையை முடித்து வெளியே வந்ததும் கற்களையும் மற்றும் ஆபத்தான பொருட்களையும் பொலிஸ் மீதும் மற்றும் பொது மக்கள்மீதும்வீசியதில் காயங்கள் ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டக் காரரைக் கலைக்கப்பொலிஸார்தடியடிகளையும் கண்ணீர்ப்புகையையும் பிரயோகித்தனர். சில மணி நேரத்தின் பின் நிலைமை கட்டுக் கடங்கியதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

# அமெரிக்கர்களை பணயம் வைத்த ஈராக் அதிபர்

(வாஷிங்டன்)

1991 இல் நடந்த வளைகுடாப்போரின் போது தங்களை ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுஸைன் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினார் என 150 அமெரிக்க தலைமைநீதிமன்றில்வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணை நடைபெற்றபோது, 1990 இல்குவைத்தை ஈராக்கைப்பற்றியவுடன் அமெரிக்கர்களைப் பிடித்து பணயக் கைதிகளாக பயன்படுத்தினார் என்றும், அமெரிக்கா மற்றும் இதர நாடுகள் மேற்கொண்ட விமானத் தாக்குதலுக்கு எதிராக சாதாம் இவ்வாறு நடந்து கொண்டார் என்றும் அமெரிக்கா தரப்பில் ஆஜரான சட்டத்தரணி வாதிட்டார்.

ஆயினும், சதாம் தரப்பில் யாரும் வாதிடவில்லை எனவும் இவ் வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறும் எனவும் தெரியவந்துள்ளது. (உ-2)

# இஸ்லாமிய பேராளர் அமைப்பு கவலை

(டோகா)

ஆப்கான் மீதானஅமெரிக்க தாக்குதலினால் ஆப்கான் மக்கள் கொல்லப்படுவதற்குஇஸ்லாமிய பேராளர் அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

டோகாவில் கூடிய இஸ்லாமிய நாடுகளின்வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டிலேயே இக்கவலை தெரிவிக்கப்பட்டது. ஆயினும்ஆப்கான் மீதான அமெரிக்க தாக்குதலிற்கு இம் மகாநாட்டில் கண்டனம் எதுவும்தெரிவிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. [செ-2]

# பின்லேடனின் கைதுடன் போர் நிறுத்தம்வேண்டும்

(இஸ்லாமபாத்)

ஒஸாமா பின்லேடன் பிடிபட்டவுடன் அமெரிக்கா ஆப்கானிஸ்தான்மீதான போரை நிறுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அப்துல் சதாத்கூறியிருக்கிறார்.

இதற்குப் பிறகும் அமெரிக்கா போரைத் தொடருமானால் அது இஸ்லாம் உலகில் பெருமளவு சேதங்களை ஏற்படுத்துமென்று தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம்வெளியுறவு அமைச்சர் மேலும்தெரிவிக்கையில் பாகிஸ்தானில் அண்மையில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்ற போதும் அது சிறு குழுக்களின் செயல்களே என்றும் பாகிஸ்தான் பெரும் பான்மை மக்கள் அரசின் போக்கையே பிரதிபலிப்பவர்களாக இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். (து)

# இந்திய அணி வென்றது

(டர்பன்)

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் மூன்று நாடுகள் பங்கு பற்றும் முக்கோண ஒருநாள் கிரிக்கெட்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இந்திய கென்யா அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் இந்தியா 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் மட்டை வீசிய கென்யா அணி 37.1 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 30 ஓட்டங்களை எடுத்தது.

பதிலிற்கு மட்டை வீசிய இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 15.3 ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தது. (உ-2)

# நிலக்கரி ஊழல் வழக்கு உச்ச நீதிமன்றில் ஜெயலலிதா விளக்கம்

(சென்னை)

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நிலக்கரி ஊழல் வழக்கில் முதல் முறையாக கடந்த வியாழக்கிழமை நீதிமன்றில் விளக்கமளித்தார்.

பல அழைப்பாணைகளுக்குப் பின் நேரில் தோன்ற வேண்டும் என்று நீதி அரசர் உத்தரவிட்டதை அடுத்து செல்வி ஜெயலலிதா இரண்டாவது உச்ச நீதிமன்றில் விளக்கமளித்தார்.

மின்சார நிலையத்திற்கு நிலக்கரி கொள்வனவில் ஏற்பட்ட ஊழலில் முதலாவது நபரான செல்வி ஜெயலலிதா ஒருமணி நேரம் பதிலளித்தார்.

நீதிபதி கேட்ட 20 கேள்விகளுக்குப் பதிலளிக்கையில்; தமிழ் நாட்டிற்கு நிலக்கரி இறக்குமதி செய்ததில் 50 கோடி லாபம் கிடைத்ததாகவும் தன்மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் பொய்யானவை யென்றும் அரசியல்ரீதியாகபழிவாங்கும் நோக்கில் வழக்குப் போடப்பட்டிருப்பதாகவும் பதிலளித்தார்.

நீதிபதி வழக்கு விசாரணையை வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். (து)

# பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு புதிய பயிற்சியாளர்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதியபயிற்சியாளராக முன்னாள் டெஸ்ட் ஆட்ட வீரர் முடசுயிர் நஸார் நியமிக்கப்பட்டுள்ளார்.

வரும் ஜனவரி மாதம் பங்களாதேஷ் இற்குசுற்றுப்பயணம் மேற்கொள்ளும் வரை நஸார் பயிற்சியாளராக இருப்பார்.

பாகிஸ்தானின் கிரிக்கெட் பயிற்சியாளர் றிச்சட் பைவாஸ் பிராந்தியசூழ்நிலையால் தான் தொடர்ந்தும் கடமையாற்ற முடியாது என நாட்டை விட்டு வெளியேறியதை தொடர்ந்தே நஸார் புதியபயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (செ-2)

# தேசிய மட்டத்தில்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ளது. இதன்படி பிள்ளை ஒன்றின் முன்னேற்றம் தொடர்பாக மொழி மிக முக்கியமான தொன்றாகக் கருதப்படுகின்றது. இம் மொழித் திறன்கள் ஒன்றோடொன்று பிணைந்து உட்தொடர்புடையனவாதலால் இத் திறன்களுள் ஒன்றைத் தனித்துக் கற்பிக்க முடியாது. எனவே இத்திறன்களின் குறைபாடு பிள்ளையின் அடைவைப் பாதிக்கின்றது. இத்திறன்களில் பிள்ளைகளின் திறமையைத் தூண்டுதல் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களின் புனிதமான கடமையாகும்.

வசதிமிக்க சமூகங்களில் போன்றே வசதி குறைந்த சமூகங்களிலுள்ள பிள்ளைகளும் அதே ஆய்வூக்கங்களோடும், உட்கிரகித்தலின்போக்குகளோடும் வளர்கின்றனர். எனினும் வசதி குறைந்த சூழவிலுள்ள பிள்ளைகள் தமது இயல்பான சுபாவங்களின் ஆரம்ப வளர்ச்சிக்குக் கூட வசதியளிப்பதற்கு அமையப் பெறாத வரையறுக்கப்பட்ட அனுபவங்களையே பெறுகின்றனர்.

இலங்கையில் பாடசாலை பாடவிதானம் தொடர்ந்தும் மொழியையும், கணிதத்தையும் கற்றலில் வலியுறுத்தி வந்துள்ளது. 1972 கல்விச் சீர்திருத்தங்கள் மொழியையும், கணிதத்தையும் வாழ்க்கைத் திறன்களாக ஒன்றிணைத்ததால் முழு ஆரம்ப பாடவிதானத்துக்கும் ஒரு புதிய பரிமாணம் ஏற்பட்டது. இச்சீர்திருத்தங்களில் ஆரம்பப்பாடவிதானத்தில் கணிதத்தில் பெரும் தொகையான புதிய எண்ணக்கருக்கள் சேர்க்கப்பட்டன. புதிய கணிதத்தின் அறிமுகம் பல புதிய பிரச்சினைகள் தோன்றுவதற்கும்ஏதுவாயிற்று. தாழ் அடைவு ஆசிரியர் தகைமையின்மை, பொருத்தமற்ற பாரம்பரியக் கற்பித்தல் முறைகள் அவற்றுட் சிலவாகும். இதற்குப் பரிகாரமாக 1984 இல் ஆரம்ப நிலையில்25 எண்ணக்கருக்கள் அடங்கிய புதிய பாடவிதானம் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறு தொடந்து ஆரம்பகணிதபாடவிதானத்தில் மாற்றங்கள் வந்து கொண்டேயிருந்தன. இதனால் ஆசிரியர் பயிற்சியிலும்சமாந்தர மாற்றங்கள் தேவைப்பட்டன. புதிய கணித எண்ணக்கருக்கள் வித்தியாசமான கற்பித்தல் திறனகளைக் கோரியது. இதற்காகப் பெருந் தொகையான கற்பித்தல் உதவிச் சாதனங்கள் முக்கியமாகின. எனவே ஒவ்வொரு ஆசிரியருக்கும் கற்பித்தல் உதவிச் சாதனங்களைத் தயாரிக்கும் தொழில் நுட்பங்களையும், அவற்றைப் பயன்படுத்தும் முறையையும் வழங்கவேண்டியிருந்தது. எனவே துரிதப்படுத்தப்பட்டவார இறுதி சேவைக்கால ஆசிரியர் பயிற்சிநெறி ஒன்று உடனடியாக அறிமுகப்படுத்தப்பட்டுஇன்று வரை சேவைக்கால ஆசிரியர் பயிற்சிநெறி தொடர்கிறது. இதே போல்ஆசிரியர் கல்லூரிகளிலும், பயிற்சிகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. இன்று மேலதிகமாக, புதிய பரிமாணத்துடன் கல்விக் கல்லூரிகள் ஆசிரியர் பயிற்சிகளை மேற்கொள்கின்றன. புதிய கல்விச்சீர்திருத்தங்களும் நடைமுறைக்குவந்துள்ளன. எனினும் இலங்கையில் ஆரம்ப நிலையில் கணிதத்தின் விளக்கத்தினதும், அடைவினதும் மட்டங்கள்சார்பான முறையான கண்காணிப்பு வேலைத்திட்டம் விருத்தி செய்யப்படவில்லை இதனால் வசதி குறைந்த பகுதிகளில் கணிதம் தொடர்பான தகுதி மட்டம் குறைவாக இருந்தது மட்டுமல்லாது பெரும்பாலான பிள்ளைகள் கணிதத்துடனும், மொழியுடனும் தொடர்பான அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெறாமலேயே பாடசாலையைஇடையில் விட்டுச் சென்றுள்ளனர். (தொடரும்)

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅதவர்
குறள்

# வலம்புரி

## பழைய பல்லவி வேண்டாம்

பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பேரினவாதக் கட்சிகள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்போம் என்ற பிரச்சாரங்களை அவிட்டு விடுவர் என்பது தெரிந்த கதை. கடந்த இருபதுவருடங்களில் இடம் பெற்ற பொதுத் தேர்தல்களில் எல்லாம்.

தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்கி - இனப்பிரச் சினைக்குத் தீர்வு கண்போம் என்ற பல்லவியை பாடியே பதவி பெற்றன.

ஆனால் எந்தக் கட்சியினரும்தமிழர்களின்பிரச்சினையை ஏற்றுக் கொள்ளவோ, அல்லது அதனைத் தீர்த்து வைக்கவோ முன்வரவில்லை. ஆக தேர்தலில் ஆசனங்களை கைப்பற்றும் ஓர் ஆயுதமாகவே இனப்பிரச்சினையை அவர்கள் கையாண்டனர்.

ஒருபுறத்தில்உயிர்களும் உடமைகளும் அழிவுற்றுக் கொண்டிருக்கும்பொழுது மறுபுறத்தில்பதவிமோகத்தில் அரசியல்வாதிகள் அதனை ஆதரிக்கும் செயற்பாட்டிலேயே ஈடுபட்டுள்ளனர். தொடர்ந்தும்இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப் போமென்ற பிரச்சாரங்களை மக்கள் நம்பிதமது வாக்குகளை அளிப்பார்களாயின் அஃது விழலுக்கு இறைத்த நீராகவேயிருக்கும்.

கடந்த தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணிஇனப்பிரச்சினைக்கு உடன்தீர்வு காண்போமென மார்தட்டியது. ஆனால் நடந்ததென்ன?

இப்போது ஐக்கிய தேசியக்கட்சி இனப்பிரச்சினைக்கு உடன் தீர்வு காணப்படுமென தனது பல்லவியை இசைக்கத் தொடங்கியுள்ளது.

உண்மையான விசுவாசத்தோடு ஐ.தே.கட்சி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாயின் பின்வரும் விடயங்களைத் தனது தேர்தல்விஞ் ஞாபனத்தில் முன்வைக்க வேண்டும்.

★ புலிகள் மீதான தடையைநீக்குதல்.

★ யுத்த நிறுத்தம்.

★ நோர்வேத் தூதுவர் எரிக்சோலின் சமாதான முயற்சியை முன்னெடுத்தல்.

★யாழ். குடாநாட்டில் குடிகொண்டுள்ள இராணுவத்தை வாபஸ் பெறுதல்.

★அரசியல் தீர்வு காணும் போதுபௌத்தபீடாதிபதிகளின் தலையீட்டுக்கும் கருத்திற்கும் இடமளிக்காதிருத்தல்.

பரமபிதா காட்டிய பாதை

# நம்பிக்கையுள்ள செபம் ஆக்கந் தரவல்லது

# பொது நலனுக்காகவும் பிரார்த்திப்போம்



நவீன உலகின் சிந்தனைப் போக்கு நாளுக்கு நாள் மாற்றமடைந்து கொண்டு செல்வதைக் காணுகின்றோம்.புதியன படைக்கத் துடிக்கும் மனிதன் கட்டுக்கோப்பான தொன்மையான மரபுகளையும் உடைத்தெறிந்து கொண்டு தேவையான பலவற்றை ஒதுக்கித் தள்ளி தேவையற்ற பல பண்புகளைத் தமதாக்கக் கங்கணங் கட்டுகிறான்; காலத்தின் தேவை என்று சொல்லிக் கொண்டு, களையமுடியாத தப்பான வழிமுறைகளை மறைமுகமாகக் கற்றுக் கொள்ளுகின்றான். ஆனால் மனிதனிடம் இருக்க வேண்டிய மனித நேயப் பண்புகளைச் சிறப்பாக பிறரை நேசிக்கும், நன்றி சொல்லும் பண்புகளைக் காண்பது அரிதாகவே உள்ளது. இயேசுவின் காலத்திலும் நன்றியில்லாத தனம் இருந்துதான் இருக்கின்றது.பத்து தொழு நோயாளர்களை இயேசு குணமாக்கிய போது ஒருவன் மட்டும் திரும்பி வந்து நன்றி சொன்னான் இயேசு அந்த ஒருவனிடம் மற்ற ஒன்பது பேரும் குணமாகவில்லையா? என்று கேட்டார்.

### ஆழமான விசுவாசம்

எம்மிலே தலைவனை ஏற்றுக் கொள்ளும் விசுவசிக்கும் நிலைப்பாடுகள் தளம்பலான நிலையிலே உள்ளன, கூட இருந்து குழிபறிப்பாரும் காட்டிக் கொடுப்பாரும் நன்மைகளைப் பெற்றபின்பு புறம் கூறும் மனநிலைகளே அனேகரிடம் குடிகொண்டுள்ளது. ஆழமான விசுவாசம் இன்மையே எமது உடல் நோய்களுக்கும், உள நோய்களுக்கும் காரணமாக அமைகின்றது. தேவைகள் இருக்கும் வரை பயனுள்ளவனாகவும், தேவைகள் நிறைவான போது குப்பை என்றும் நினைத்து தூக்கி எறிந்து விடுகின்றோம். எல்லா நிலையினரிடமும் இப்படியான நிலை காணப்படுவதால், நல்வழிகாட்டிகள் இல்லாத சமுதாயமாக இன்றைய சமூகங்கள் மாறிக் கொண்டு வருகின்றன.

இறைபற்றும் இறை நம்பிக்கையும் நம்மிடம் இருக்குமானால், நாம் பிறருக்குப் பாரமாகவோ, துன்மார்க்கமுள்ளவர்களாகவோ, எதிரிகளாகவோ இருக்கமாட்டோம், ஏனென்றால் இறை பண்புகள் எம்மிலும் செயலாற்றுவதால் எமக்குத் துன்பம் செய்யும் மனநிலை இருக்க வாய்ப்பு இருக்காது. நம்மை இலகுவில் எவரும்

## அமல அருள்தாசன்

ஏமாற்றிவிடவும் முடியாது. ஏனென்றால், இறை அருள் எம் துணையாக இருக்கும் "நாம் அவரோடு இருந்தால் அவரோடு வாழ்வோம்; அவரோடு நிலைத்திருந்தால் அவரோடு ஆட்சி செய்வோம்: நாம் அவரை மறுதலித்தால் அவரும் நம்மை மறுதலிப்பார்" (லூக் 17:18) என்று வேதம் கூறுகின்றது.

### இளைய சமுதாயம்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய் நன்றி கொன்ற மகற்கு" என்று திருவள்ளுவரும் நன்றியற்றவர் நிலையைக் கூறுகின்றார். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பர். இவர்களை நன்றியோடு மதிக்காத நிலையே நாகரிகம் என்ற போர்வையில் தாறுமாறான செயற்பாடுகளுக்கு இட்டுச் செல்கின்றது. கற்றறிந்து அனுபவமுள்ளவர்களின் கருத்துக்கள் புறக்கணிக்கப்படுகின்றன. கம்பியூட்டர் வேகத்தில் கட்டிக்காத்த பண்பாட்டு விழுமியங்கள் காவு கொள்ளப் படுகின்றன அன்பான, பண்பான வார்த்தைகள் செயற்பாடுகள் அருகி மறைந்தனவோ? என்ற ஐயம் ஏற்படுகிறது. இளைய சமுதாயம் இடர்ப்படுகின்றது.

விஞ்ஞான விந்தைகள் மெய்ஞானத்தை மறைக்க நினைக்கின்றன. கடவுள் மேல் உள்ள நம்பிக்கையை அவை ஒன்றும் செய்ய இயலாது திடமனது இல்லாவிட்டால் எக்காரியத்தையும் முழுமையாகச் செய்ய முடியாது. நம்பிக்கையுள்ள செபம் அழிவுகளை நிறுத்தி ஆக்கத்தைத் தரவல்லது. நடக்கமுடியாத காரியங்களையும் செய்யவல்லது. நம்பிக்கை உடையோர் உருக்கமாகச் செபிக்கும் போது நாட்டிற்கும் விடுதலை கிடைக்கலாம் இறை நம்பிக்கையிலே நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்ப பிறர் நலனுக்காகவும் பொது நலனுக்காகவும் செபிப்போம். இத்தகைய ஒரு அனுபவத்துக்குள் நாளும் வாழுவோம். நல்லவை நடந்தே தீரும். □

# தேசிய மட்டத்தில் ஆரம்ப நிலை மாணவரின்

# கணித பாட அடைவில் ஏற்றத் தாழ்வுகள்

தம்பியப்பா காங்கேசபிள்ளை
M.Phil (Edu) B.Sc., P.G.Dip.in-Edu. SLEAS
முது நிலை விரிவுரையாளர் (கணிதம்)
பலாலி ஆசிரியர் கலாசாலை.

(நேற்றைய தொடர்ச்சி)

(4)

### அடிப்படைத் திறன்களில் அடைவு

வசதி குறைந்த கிராமிய, நகர் சமூகங்கள் இரண்டிலும் நிகழும் முக்கிய ஏற்றத்தாழ்வுகளில் ஒன்று அடிப்படைத் திறன்களின் குறைவாகும். இவ் வேற்றத் தாழ்வுகளுக்கான காரணங்களில் ஒன்று அங்கு வழங்கப்படும் கல்வியின் தரங்களைமதிப்பிடுவதில்லை. அல்லது மாணவர்கள் அடையக் கூடியவை தொடர்பாக அவர்கள் அடைவதை மதிப்பீடு செய்வதாகும். வசதி படைத்த ஆரம்பப் பாடசாலைகளில் பிள்ளைகள் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமென்றஒரேநோக்கிற்காக அத்தேர்வில் நடாத்தப் படும் பாடங்கள் தொடர்பாகவே ஒரு பொறிமுறையான பயிற்சிகள் இடம்பெறுகின்றனவேயன்றி மாணவரின் உள்ளார்ந்த ஆற்றலை வெளிக்கொணரும் கற்பித்தல் இடம்பெறாதது மாத்திரமன்றி, ஏனைய பாடங்களில் அவர்கள்முழுமையான அடைவைப் பெறும் கற்பித்தல் முயற்சிகள் அவ்வளவு இடம் பெறுவதில்லை எனவும் கருதப்படுகிறது. அடைய வேண்டிய அடிப்படைத் திறன்கள் பலவுண்டு. இருப்பினும் எதிர்பார்த்த திறன்கள்குறிப்பாகக் கணிதத்துடனும், மொழியுடனும் தொடர்புபட்ட திறன்கள் இன்னும் அடையப் பெறவில்லை.

கணிதமும், மொழியும் ஒரு பிள்ளையின் அடைவை விருத்தி செய்யும் இரு முக்கிய கூறுகளாகும். கணிதம் ஒரு பிள்ளைக்கு இன்றைய உலகினதும் எதிர்கால உலகினதும் விஞ்ஞான இயல்பை விளங்கிக் கொள்வதற்கான திறன்களை வழங்குகின்றது. கணிதம் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பிரயோக வேலைகளைச் செய்வதற்குப் பயனுள்ள கருவியாகக் கருதப்பட வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் கணிதத்திலும், மொழியிலும் அடிப்படைத் திறன்களை அடைவதற்குரிய வழிமுறைகளை வழங்கப்படாதிருத்தல் வசதியற்றோரை இன்னும் வசதியிழக்கச் செய்யும். பிரயோகப் பெறுமதிக்கு மேலதிகமாக கணித எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்ளுதல், வசதி குறைந்த பகுதிகளிலுள்ள பிள்ளைகள் இடைநிலைக்கல்வியை அடைவதற்கு அத்தியாவசியமாகின்றது.

மொழியானது மிகச் சிறந்த பயன்மிக்க சமூகத் தொடர்பை உலகெங்குமுள்ள மக்களிடையே ஏற்படுத்துகிறது அது ஒருவரின் கலாசாரத்தினதும், அந்தஸ்தினதும் கண்ணாடி எனக் கூறப்படுகின்றது. மொழித்திறன் குறைபாடு ஒருவரது முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாக இருப்பதோடு அவரின் வெற்றி கரமான வாழ்க்கைக்குத் தேவையான பல சமூக ஆஸ்திகளையும் இழக்கச்செய்கிறது. உண்மையில் பிள்ளைக்கு இத்திறன்களை வளர்ப்பதற்கான முக்கிய பொறுப்பு பிள்ளையின் பாடசாலை வாழ்க்கையில் ஆரம்பப் பாடசாலையின் மேல் சுமத்தப்படுகின்றது. உளவியலாளர்களின் கருத்துப்படி பிள்ளை விருத்தியின் அடிப்படை மொழி விருத்தியாகும். மொழி தொடர்பாகப் பிள்ளையின் விருத்தி என்பது அப்பிள்ளையில் விருத்தி செய்யப்படக் கூடிய எண்ணக்கருக்களின் அளவு என்பதாகும். பிள்ளையின் சிந்தனையின் எல்லைகளின் விரிவாக்கம் மொழியுடன்தொடர்புடையதாகும். எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வதற்கு மொழித்திறனே முக்கியத்துவம்பெறுகின்றது எனவேதான் மொழி விருத்தியும், பிள்ளை விருத்தியும் ஒன்றோடொன்று நெருக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ளன.

பாடசாலைக் கற்றல், கேட்டல், பேச்சு, எழுத்து, வாசிப்பு ஆகிய நான்கு மொழியின் கூறுகளின் அடைவு மட்டத்தில் கூடுதலாகத் தங்கியுள்

(6-ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

## விவேகம்

எப்பொருளும் நீயெனவே
எண்ணி நான் தோன்றாத
வைப்பை அழியா நிலையா
வையாய் பராபரமே

-தாயுமானவர்

சித்திசை குடி கொண்டுள்ள அறிவான தெய்வமே, விவேகம் என்னும் விளக்கேற்றி வைத்து உன்னைத் தரிசிப்பேனாக.

நித்தியமாய், மனிதனுக்கு நலன் தருவதாய் இருப்பது எது என்று பாகுபடுத்த வேண்டும்; உடலையும் உள்ளத்தையும் பற்றிய யாவும் ஓயாது மாறிக் கொண்டிருக்கின்றன. ஆகையால் அவை நித்தியமானவைகள் அல்ல. அறிவையும் ஆனந்தத்தையும் பற்றியது நித்தியமானது. இதை அறிந்து கொள்ளுதல் விவேகம்.

-ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

# ஐ.தே.கவின் மார்பியா கும்பலில்சேர திஸநாயக்கா சென்றுள்ளார்

## ஜே. வி. பி. உறுப்பினர் கிண்டல்

(கொழும்பு)

பொது மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்துவரும் ''மார்பியா'' கும்பலின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக ரணில் விக்கிரம சிங்காவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடன் முன்னாள் அமைச்சர்எஸ். பி திஸநாயக்கா இணைந்துள்ளார் என்று ஜே. வி. பி யின் அரசியல் குழு அங்கத்தவரான விக்இரமரட்ண ரிக்கா தெரிவித்துள்ளார்.

பிற்போக்கு சக்திகள் மேற்கொண்டஇச்சதித்திட்டத்தின் பயனாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துள்ளனர்.

கடந்த 10ம் திகதி பாராளுமன்றத்தில் இடம் பெற்ற கட்சித் தாவல்களின் போது 'மார்பியா' கும்பலைச்சேர்ந்தவர்களும் பிரசன்னமாக இருந்ததைக் கவனிக்க முடிந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நன்மை தேடித்தரக் கூடிய நல்ல திட்டங்களை நிறைவேற்ற விருந்த தருணத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி அதற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (வ)

# கட்சிவிட்டுகட்சிதாவும் படலம் ஆரம்பம்

(கொழும்பு)

கடந்த பத்தாம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து முன்னாள் எம்பிகள் பல, கட்சிகளின் முக்கிய புள்ளிகள் கட்சிவிட்டுக்கட்சி மாறும் படலத்தை ஆரம்பித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் முன்னாள் அமைச்சர்கள் ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடவிருக்கும் அதேவேளை ஐக்கியதேசியக் கட்சியின் முக்கியபிரமுகர்கள் பலர் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணையவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின் கட்சிமாற்றம் பெரும்பாலும் இன்றுஅல்லது நாளை இடம்பெறலாம் என்றும் அதற்கான பேச்சுவார்த்தைகள் மிகவும் இரகசியமான முறையில் இடம்பெற்று வருவதாக அரச வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (வ)

---

வவுனியாவில்

யத்திற்கருகிலுள்ள கராச்சில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

பொலிஸ் நிலையம் அல்லது சிவில் அலுவலகம்மீது தாக்குவதற்காகஇக்குண்டுமறைத்து வைக்கப்பட்டிருக்க லாமென பொலிசார் தெரிவித்தனர்.

---

# தேர்தல் பாதுகாப்பு பொலிசார் உஷார் நிலை

(கொழும்பு)

எதிர் வரும் டிசம்பர்மாதம் 5ம்திகதி நடை பெறவுள்ள 12வது பொதுத்தேர்தலுக்கான பாது காப்பு ஏற்பாடுகள் குறித்து பொலிஸ் தலைமையகம் விசேட கவனம் செலுத்தி வருகிறது.

அடுத்த வாரம்முதல் அரசியல் கட்சிகள் தமது தேர்தல் பிரசார வேலைகளை ஆரம்பிக்கவுள்ளதால் வேட்பாளர்களின் மற்றும் அரசியல் பிரமுகர்களின் பாதுகாப்பு குறித்து ஆராயப் பட்டுள்ளது.

இதனை அடுத்து பொலிஸாரின்லீவுகள்யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் விசேட கடமைக்காகவும் அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பொலிசாருக்கு உதவியாக கலகம்அடக்கும் பொலிசாரையும்கடமைக்கு அழைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ)

---

நிவாரணத்திற்கு

லுக்கள் செய்யப்பட்டு தனிப்பட்ட வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சங்கங்களில் இருந்து இடம் மாற்றப்பட்ட அரிசி மூடைகளில் 55 மூடை மானிப்பாயிலுள்ள மண்ணெண்ணைக் கடையொன்றிலும், 83மூடை கட்டுடையில் உள்ள வீடியோ சென்ரர் ஒன்றிலும் 56மூடை கட்டுடைச் சந்தியில் உள்ள வீடொன்றிலும் 44மூடைகள் மானிப்பாய் வீ. சி. லேனில் உள்ள மில் ஒன்றிலிருந்துப் மீட்க பட்டன

நிவாரண விநியோகத்திற்காக மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை இல. 3, 8, 15, 20, 10, 25, தெல்லிப்பழை சங்க கிளை இல.18, பண்டத்தரிப்பு பிரான்பற்றுச் சங்கம், பண்டத்தரிப்பு மத்திச் சங்கம் மற்றும்சில்லாலைச்சங்கம்ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட அரிசியே தனிப்பட்ட வியாபாரிகளுக்கு களவாக விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நிவாரண அரிசியில் மோசடி நடப்பதாகவும் அதனை நேரில் சென்று அவதானிக்கும் படியும்முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று வலி தென் மேற்கு பிரதேசசபைத்தலைவர் அன்ரன் ஜோன்சனுக்கு விடுத்த பணிப்புரைக்கமைவாகவே மேற்படி அரிசியில் இடம்பெற்றமோசடி கண்டு பிடிக்கப்பட்டது.

மேற்படி நிவாரண அரிசி விநியோகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மோசடி தொடர்பாகவும் அதனுடன் சம்மந்தப்பட்டவர்கள் தொடர்பாகவும் நேற்று மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ)

---

# தமிழ்க் கட்சிகள் கூட்டுச் சேரும் கூட்டம் மீண்டும்இன்றுமாலைகூடும்

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்துபோட்டியிடுவதென்ற தீர்மானத்தில் நேற்று எந்த ஒரு முடிவும் எட்டப்படாத நிலையில் இன்று மாலை கூடவுள்ளனர்.

எதிர் வரும் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ.பி. ஆர் எல்.எவ் (சுரேஷ்அணி) ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்து போட்டியிடுவதற்கு இணக்கம் காணப்பட்ட போதும் தமிழ்க் காங்கிரஸ் மட்டும்கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதற்கு இன்னமும் இணக்கம் தெரிவிக்கவில்லை.

இது தொடர்பாக நேற்று நடை பெற்ற கூட்டத்தில் கூட்டணியைச் சேர்ந்த மாவை சேனாதிராசா, ரெலோவைச் சேர்ந்த செல்வம் அடைக்கலநாதன் காங்கிரசைச் சேர்ந்த அ விநாயகமூர்த்தி, செயலர் ந. குமரகுருபரன், எஸ். நடராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (வ)

# ஜே. வி.பி.யின் கருத்துக்கு தமிழ்க்கட்சிகள் கண்டனம்

(கொழும்பு)

தமிழ்க்கட்சிகளை குப்பைத் தொட்டி என்று ஜே. வி பி. வர்ணித்துள்ளதுக்கு தமிழ்க் கட்சித்தலைவர்கள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழர்விடுதலைக்கூட்டணி உபதலைவர் வீ, ஆனந்த சங்கரி கருத்துத் தெரிவிக்கையில்

தமிழ்க்கட்சிகள் தொடர்பாகபேசுவதற்கு ஜே. வி.பி.க்கு எந்தவிதமான அருகதையும் கிடையாது. வன்செயலில் ஈடுபட்டுவந்த இவர்கள் தற்போது அவற்றைக்கைவிட்டு நல்லபிள்ளைக்குநடிக்க முன்வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

யார்குப்பை, யார்குண்டுமணி என்பது எதிர்வரும் பொதுத்தேர்தல் தெளிவுபடுத்தும் என்றும் காங்கிரஸ் தலைவர் அ. விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார். (வ

# 2 முன்னாள் அமைச்சர்கள் ஐ.தே.கவுக்கு மாறினர்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியில் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சராகப் பதவி வகித்த நந்தமித்ர எக்கநாயக்காவும், சுற்றுலா இளைஞர் விவகார அமைச்சராகப் பதவி வகித்த லஸ்மன் கிரியல்லவும் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டனர்.

எதிர் வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பாக கண்டி மாவட்டத்தில் போட்டியிட இருப்பதாக லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார். (இ)

---

தமிழ் மக்களின்

மொன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

வடக்கு கிழக்கில் தமிழ்க் கட்சிகள் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதை எமது கட்சி வரவேற்கின்றது. இதற்காக நாம் எந்தவிதமான விட்டுக் கொடுப்புக்கும் தயாராக உள்ளோம்.

தற்போதுள்ள இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளும் சிங்கள மக்களின்நலன்களைப் பாதுகாக்கும்விடயத்திலேயே கருசனையுடன் செயற்பட்டு வந்தன.

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் கடந்த காலத்தில் தமிழர்களின் பிரச்சினையில் ஒரே மாதிரியான அணுகுமுறையையே கடைப்பிடித்து வந்ததே வரலாறு படிப்பித்துள்ள பாடம்.

தமிழ்க் கட்சிகளுடன் கூட்டுச்சேர்வதால்தடங்கல் ஏற்படின் வடக்கு கிழக்கில் தனித்துப் போட்டியிடவும் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். (வ)

---

## கிரிக்கெற் சுற்றுப் போட்டி

(இருபாலை)

கல்வியங்காடு ஜீ. பி. எஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7பேர் கொண்ட 12ஓவர் கிரிக்கெற் சுற்றுப் போட்டி இன்று நடைபெறும். இதில், இன்று காலை 8 மணிக்கு கொக்குவில் ''கே. சி. சி.'' அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பஷன் விளையாட்டுக் கழகமும், காலை 10மணிக்கு மானிப்பாய் பரிஸ்விளையாட்டுக்கழகத்தை எதிர்த்துகொட்டடி ''கே. சி. சி'' அணியும் மோதவுள்ளன.

போட்டிகள் அனைத்தும் ஜீ. பி. எஸ் மைதானத்தில் நடைபெறும். (இ- 221)

---

புலிகளின்

னராவர்.

இவர் விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பில் ஐரோப்பாவில் நடத்தப்படும் நிகழ்வுகளில் அடிக்கடி கலந்து கொண்டு சிறப்பிப்பவர்.

இதேவேளை பஹறி ஹாடினர் தனது இலங்கை விஜயம் குறித்து லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அறிவிக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

---

ஸ்ரீலங்கா

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசில் இதுவரை காலமும்தனது தேசியப் பட்டியலில்எம்பியாக ஒரு சிங்களவரையே நியமித்தது. ஆனால் இம் முறை வழக்கத்துக்கு மாறாக சிறுபான்மை மக்களின் சுயாட்சி உரிமைக் காகக் குரல்கொடுக்கக் கூடிய ஒரு தமிழரையே நியமிக்கவும் நாம் தீர்மானித்துள்ளோம்.

இம்முறை எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணிஜனாதிபதிசந்திரிகா சிறுபான்மைமக்களிடம் காட்டிய ஜனநாயக விரோதப் போக்கை முறியடிக்கும் என்றும் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார். (வ)

---

விக்கிரம...

டுள்ள படையினர் அனைவரும் மனச்சாட்சியின்படி உணர்ந்து செயற்பட்டால் படையில் இருந்துவிலகவேண்டிவரும்' என அண்மையில் விக்கிரமபாகு கருணாரட்னா கருத்து வெளியிட்டிருந்தார்.

இவ் அறிக்கை தொடர்பாக சட்டமா அதிபரின் பணிப்புரைக்கிணங்க குற்றவியல் சட்டத்தின் கீழ் விசாரணை இடம் பெற்றதென தெரிவிக்கப்படுகிறது. (இ)


## துயர் பகிர்கின்றோம்

தீவுப்பகுதி தெற்கு பிரதேசசபைத் தலைவர்
திரு. ந. கருணாகரகுருமூர்த்தி (J.P.U.M)
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
**நமசிவாயம் மனோன்மணி**
அவர்கள்

11-10-2001 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்குவதுடன் அவரது குடும்பத்தாருடன் சேர்ந்து நாமும் துயர் பகிர்ந்து ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

பொறுப்பதிகாரியும், அலுவலர்களும்,
வேலணை பிரதேச சபை,
உப அலுவலகம்,
மண்டைதீவு.

(C-2729)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி

உடற்கல்விடிப்ளோமா கற்கை நெறிக்கான 2ம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் 15-10-2001 அன்று ஆரம்பமாகும்.

பதிவாளர்
[கி-2733]



30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும் விஷேசமாக தயாரிக்கப்பட்டது.

சுத்தமான
**வி.எஸ்.பி, நல்லெண்ணெய்**
தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்
**பரிமளா ஸ்ரோர்ஸ்**
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(கி/1986)


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.